## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட்டினதும் (“கம்பனி”) மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (“தொகுதி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினையும், பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்களினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (சி ம ந தொ இ நி அ த) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி மற்றும் தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனி மற்றும் அதன் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனி தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின்

அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 17.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்தொன்றாக அங்கீகரிக்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா 455,715 ஆன தகவல் தொழில்நுட்ப உதிரிப்பாகங்கள் கொள்வனவு பராமரிப்புச் செலவொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்தில் அதன் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரியாக அடையாளம் இடப்படுத்தப்பட்டு மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 28.34(பீ) ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு தன்னார்வ இராஜினாமா முன்மொழிவுத் திட்டத்தின் விளைவாக சேவையை முடிவுறுத்தும் நலன்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றபோது அதன் நலன்கள் பொறுப்பொன்று அல்லது செலவொன்றாக அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் தன்னார்வ ஓய்வு பெறும் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தர்களுக்காக செலுத்த வேண்டிய நலன்கள் தொடர்பாக கம்பனியில் அந்நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 178,471,698 குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதித்திகதி முதல் 2023 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் சேவையை முடிவுறுத்திய 149 ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 139,692,726 ஆன பணிக்கொடைப் பெறுமதி நடைமுறை பொறுப்புக்களாக தனியாக காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022 திசெம்பர் மாதத்திலே தன்னார்வ இராஜினாம முன்மொழிவொன்று (VRS) நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் நீக்கல்கள் செல்லுபடியாவது 2023 ஜனவரி மாதத்திற்குள்ளே ஆகும். இந்த ஓய்வூதியத்திற்கான செலவு 2023 வருடாந்த கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் இது தொடர்பான குறிப்புக்கள் 2022 வருடாந்த கணக்கு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் இலக்க 10.21 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த, மீளாய்வாண்டில் திருத்தப்படாத கணக்கீட்டு வழுக்களின் பெறுமதி ரூபா 7,966,630 ஆகும். | 2021 ஆம் வருடத்தில் நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வு சுட்டிக்காட்டிய வழுக்களை 2022 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் சீர் செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் வருடத்திலேயே அடையாளம் காணப்பட்ட கணக்கீட்டு வழுக்கள் 2023 ஆம் வருடத்திலே உரிமை மாற்றம் கூற்றினுள் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய சீராக்கங்கள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 21.11 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்படும் திகதியில் ஒதுக்கங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பொறுப்புக்களை தீர்ப்பதற்குத் தேவையான பணம் தொடர்பாக தற்போதைய சிறந்த மதிப்பீட்டைப் பிரதிபலிக்க வேண்டியமை அவசியமாக இருந்தபோதிலும், ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் | இது தொடர்பாக எங்களுடைய வழக்கறிஞர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் குறித்த வழக்கு, கம்பனிக்கு சார்பாக தீர்ப்பாகும் சாத்தியப்பாட்டை காரணப்படுத்தி 0.4 % சராசரி வீதப்படி ஏற்பாடுகள் | உரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பொறுப்புக்களுக்கு உரியவாறு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளில் ரூபா 500,000,000 நட்டஈடொன்றை செலுத்துமாறு உத்தரவிடப்பட்ட வழக்கிற்காக சராசரி வீதமான 0.4 வீதத்தின் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 21.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான அளவுகோல்கள் பூரணப்படுத்தப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதியில் தொழிலாளர் நியாய சபையினால் நட்டஈடு செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த 4 தீர்ப்புக்களுக்காக உத்தரவிடப்பட்டிருந்த ரூபா 4,120,740 ஆன நட்டஈட்டுத் தொகைக்காக கம்பனியில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழக்குத் தீர்ப்பு 04 இற்காக நியமிக்கப்பட்டிருந்த தொகை தொழிலாளர் நியாய வைப்புக்கு கணக்கீன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் ஒரு நிதியாண்டின் இறுதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், எதிர்பார்ப்புகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், அந்த வேறுபாடு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 10.15 மற்றும் 10.18 ஆம் பந்திகளுக்கு இணங்க கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,538,041,135 ஆன தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற, முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் அதன் பிரகாரம் மீளாய்வொன்று செய்யப்படவில்லை அல்லது கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்தில் கம்பனியின் அனைத்து சொத்துக்கள் 2022 ஆம் வருடத்தின் கம்பனியின் அனைத்து மோட்டார் வாகனங்களும் மீள் மதிப்பிடப்பட்டு அவை நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் வருடத்திலே கம்பனியின் அனைத்து அச்சு இயந்திரங்களையும் மீள் மதிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான 300 கணனி மென்பொருள் அனுமதிப்பத்திரங்களுக்கான மற்றும் இணையத் தளத்திற்கான பராமரிப்புச் செலவுகள் ரூபா 820,370 ஆனது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 பெப்ரவரி வரையான அந்த செலவுகளுக்குரிய இறுதி வரி இன்வொய்ஸ் கிடைக்கப்பெறாமையினால் 2022 நிதிக்கூற்றுக்களில் அடையாளப்படுத்துவதற்கு முடியாதுள்ளது. இந்த செலவுகள் இவ் வருடத்தின் நிதிக்கூற்றுக்களினுள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. | செலவுகளை அடையாளப்படுத்தும் போது அட்டுறு அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டிற்கான கூகுள் செயலி 261 வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 903,867 ஆன முற்பணக் கொடுப்பனவு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி வரி இன்வொய்ஸ் கிடைக்கப்பெறாமையினால் 2022 நிதிக்கூற்றுக்களில் அடையாளப்படுத்த முடியாதுள்ளது. இறுதி வரி இன்வொய்ஸ் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதை நடைமுறை சொத்தொன்றாக அடையாளம் காணப்படும். | செலவுகளை அடையாளப்படுத்தும் போது அட்டுறு அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கம்பனி மற்றும் வரி மேன் முறையீட்டு ஆணைக்குழுவிற்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அலுவலக வளாகத்தை நவீனப்படுத்துவதற்கு உரிய கொள்வனவுகள் செய்யப்பட்ட கம்பனிக்கு உரித்தற்ற 04 குளீருட்டி இயந்திரங்களின் கிரயப் பெறுமதியான ரூபா 1,303,000 கம்பனியின் ஆதனங்கள் பொறுத்துக்கள், உபகரணங்களில் அலுவலக உபகரணங்களின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு செலவுகளாக ரூபா 325,750 கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 922,958 ஆல் மற்றும் மீளாய்வாண்டில் நட்டம் ரூபா 325,750 ஆல் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | தவறுதலாக இந்த இயந்திரப் பெறுமதி நிறுவன சொத்தொன்றாக மூலதனம் இடப்பட்டிருந்ததுடன் அந்த வழு 2023 வருடத்தில் சீர்செய்யப்பட்டுள்ளது. | கம்பனியின் உறுப்புடைய சொத்துக்கள் மாத்திரம் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அடையாளப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடமிருந்து பெற வேண்டிய ரூபா 2,632,500 ஆன வாடகை வருமானப் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் அடயாலப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்யப்பட்டுள்ளது. | கிடைக்கப் பெற வேண்டிய வருமானங்களை சரியாக அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | பல்வேறு கடன்பட்டோர் மீதி ரூபா 12,605,232 உம் கையிலுள்ள காசு உபகரணக் கணக்கின் மீதி ரூபா 10,552,146 மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 2,083,088 அதிகமாக காட்டப்பட்டிருந்தன. | liobiz கணக்கீட்டு கட்டமைப்பு முறைமையில் முன்னைய திகதிய காசோலைகள் அச்சிடுதல் வரையறையின் காரணமாக 2022 திசெம்பர் மாதத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் 2022 நிதியாண்டில் அறவிடப்பட்டுள்ளது. 2022 திசெம்பர் 31 இல் நிறைவடைந்த அனைத்து (VRS) கொடுப்பனவுகளும் தற்காலிகமாக பல்வேறு கடன்பட்டோரின் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் அது மீண்டும் 2023 ஜனவரி ஆரம்பத்தில் பணிக்கொடை ஏற்பாட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | கட்டமைப்பு முறைமையின் வழுக்கள் சீர் செய்யப்பட்டு கணக்குகள் சமப்படுத்தும் வகையில் பேணப்பட வேண்டும். |
| (ஊ) | 14 ஊிழியர்களின் சேவைக் காலம் குறைவாக எடுக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூபா 701,384 ஆல் குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | HRIS கணனி கட்டமைப்பு முறைமையின் வழு ஒன்றை காரணப்படுத்தி 1200 ஊழியர்களில் 14 பேர்களில் சேவைக் காலத்தை குறைவாக கணக்கிட்டதன் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. அது இவ் வருடத்தில் சீர் செய்யப்பட்டுள்ளது. | கட்டமைப்பு முறைமையை சீர் செய்து சரியான தரவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் செலுத்த வேண்டிய பெறுமதிகளின் கீழ் வியாபார, சட்டரீதியான, செலவு மற்றும் பதவியணியில்லாத கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 40,976,807 ஆக இருந்ததுடன், அம் மீதிகளுக்கு உரிய ரூபா 6,997,346 ஆன முற்பண மீதியொன்றும் எதிரீடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் செலுத்த வேண்டிய பெறுமதி மீதிகள் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் 05 வருடத்திற்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த ரூபா | liobiz கணனி கட்டமைப்பு முறைமை நிர்மாணிக்கப்பட்டிருப்பது உள்ளபடியான கடன் கொடுத்தோர் மீதியில் இருந்து முற்பண மீதியை கழித்து கணக்குகளில் காண்பிப்பதற்கே ஆகும். இந்த நிலைமையை காரணப்படுத்திக் கொண்டு இலாபத்திற்கு பாதிப்பு ஒன்று ஏற்படாத போதிலும் 2023 ஆம் வருடத்திலிருந்து முற்பண மீதிகள் சொத்தொன்றாக | கட்டமைப்பு முறைமை வலுக்களை சீர் செய்து கணக்குகள் சமப்படும் வகையில் பேணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,466,902 ஆன 02 கடன் கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கருதப்படும். | |
| (ஏ) | மோட்டார் வாகனக் கிரயமாக காட்டப்பட்டிருந்த ரூபா 64,996,751 ஆன பெறுமதியில் ரூபா 3,912,781 பெறுமதியான அலுவலக உபகரணங்களின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந்த வழு 2023 இல் சீர் செய்யப்படும். | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | நிறுவனத்திற்குச் சொந்தமான பேருந்துகளின் பயணிகள் போக்குவரத்து சாலை அனுமதிப்பத்திரம் இலக்கங்கள் 1551 மற்றும் 1154 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கற்புலனாகாத சொத்துக்களாக இணங்கானப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு சொந்தமான பேருந்து பயணிகள் போக்குவரத்து சாலை அனுமதிப்பத்திரம் இலக்கங்கள் 1551 மற்றும் 1154 கம்பனிக்கு 35 வருடங்களுக்கு முன்பு இலவசமாகவே பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வருடத்தில் அந்த சொத்துக்கள் கட்புலனாகாத சொத்துக்களாக அடையாளப்படுத்துவதற்கு திட்டடமிடப்பட்டிருந்த போதிலும், பேருந்துகளினால் அடிக்கடி நட்டம் ஏற்பட்ட தனால் பயணிகள் போக்குவரத்து கம்பனியினால் இடை நிறுத்தப்பட்டது. அந்த நிலைமையின் அடிப்படையில் கட்புலனாகாத சொத்தொன்றாக அடையாளப்படுத்தும் நிலையொன்று காணப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு அல்லது குறிப்பின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 13 இருப்பு விடயங்களுக்கான மீளாய்வாண்டின் ஆரம்ப வரவு மற்றும் செலவு மீதிகளின் வேறுபாடு முறையே ரூபா 3,635,182 மற்றும் ரூபா 2,669,967 ஆனது வருட இறுதி வரையில் திருத்தப்படுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 6 விடயங்களுக்கான ரூபா 22,806,249 இல் இருப்பு பற்றாக்குறை கணக்கிடப்பட்டிருந்ததுடன் 5 விடயங்களுக்கான ரூபா 5,927,633 இல் மிகை கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்தில் சீர் செய்யப்படும். | ஒவ்வொரு இருப்பு விடயங்களின் பெறுமதிகளில் அடையாளம் காணப்பட்ட வேறுபாடுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றில் குத்தகை கடன் கொடுத்தோர் பொறுப்பில் குறிப்பிடப்பட்டிருந்த நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்கள் முறையே ரூபா 2,886,840 மற்றும் 8,386,829 ஆக இருந்த போதிலும், நிறுவனம் மற்றும் கணக்காய்வு போன்ற இரு தரப்பினரினதும் கணிப்பீட்டின் பிரகாரம் சரியான பெறுமதிகள் முறையே ரூபா 3,142,753 மற்றும் ரூபா 8,129,817 ஆக இருக்க வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது. | குத்தகை கடன் கொடுத்தோர் பொறுப்புக்களில் வகைப்படுத்தும் போது இந்த வழு இடம்பெற்றுள்ளது. | பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதியில் பெறப்பட்ட கடன்களின் கீழ் கொமர்ஷல் வங்கியின் காலக்கடன் மீதி ரூபா 175.502,000 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீதி ரூபா 174,335,400 ஆக இருந்தமையால் ரூபா 1,166,600 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இந்த கணக்கிடுதல் வழு 2023 பெப்ரவரி மாதத்தில் சீர்செய்யப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது உரிய கணக்குகளில் வேறுபாடுகளை அடையாளங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| பிரதி நிதிகளுக்கு வைப்புக்களின் மீதியின் அடிப்படையில் வட்டி வழங்கப்படுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2022 செப்தெம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் பிரதிநிதி வைப்பு வட்டி சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் ரூபா 1,465,102 அங்கீகரிக்கப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. | பல வருடங்களுக்கு முன்பு வைப்புக்களின் மீதியின் அடிப்படையில் வட்டி வழங்குவதற்கு பெறப்பட்ட அங்கீகாரத்தின் பிரதியொன்றை தேடி பெற்றுக்கொள்வதற்கு முடியாததன் காரணமாக கணக்காய்வின் முறையின் அடிப்படையில் அதற்காக 2022 செப்தெம்பர் மாதத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது முறையான அதிகாரத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 1.5.4 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் இலக்கம் 21 இன் 21.11 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடப்படும் திகதியில் ஒதுக்கங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பொறுப்புக்களை தீர்ப்பதற்குத் | 2020 மற்றும் 2021 வருடங்களுக்குரிய ஊழியர்களின் நீண்ட கால சேவையை கௌரவிக்கும் வைபவம் கம்பனியின் மோசமான நிதி நிலைமையின் அடிப்படையில் நடாத்த முடியாமல் போனது. ஒரு ஊழியருக்கு தங்க காசு ஒன்றும் | பெறுமதிகளை மீளாய்வு செய்து உரிய கணக்கீடு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேவையான பணம் தொடர்பாக தற்போதைய சிறந்த மதிப்பீட்டைப் பிரதிபலிக்க வேண்டியமை அவசியமாக இருந்தபோதிலும், கம்பனியால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 39,083,375 ஆன ஏனைய ஒதுக்கங்கள் மீளாய்வு செய்யப்படாமல் அப்பெறுமதிகளே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | மற்றும் அத்தினத்தில் நிலவிய 2 மாதங்களில் ஆரம்ப சம்பளங்களும் உரித்தாகும். உலக சந்தையில் தங்கத்தின் விலை தளம்பல் நிலை காணப்படுகின்றமையால் அந்த ஒதுக்கத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற தங்க காசுகளின் பெறுமதி விலை மீளாய்வு செய்யாமல் இருந்ததுடன் தங்க காசினை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் மேலதிக மற்றும் குறை ஏற்பாடுகள் கணக்குகளில் சீர்செய்யப்படும். | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் மொத்தக் கடன்பட்டோர் மீதி, வியாபார கடன்பட்டோரின் எண்ணிக்கை 1274 இற்கான மீதி ரூபா 728,686,241 ஆன மீதியில் ரூபா 8,135,294 பெறுமதியான 15 கடன்பட்டோர் மட்டும் கம்பனியின் கடன்பட்டோர் மீதியுடன் இணங்கியிருந்தது. 583 கடன்பட்டோருக்கான பெறுமதி ரூபா 204,617,890 ஆன மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லேக்கவுஸ் நிறுவனம் கணக்காய்வு திணைக்களம் ஆகியன இனங்கியதன் பிரகாரம் ரூபா 200,000 க்கு மேலதிகமான கடன்பட்டோருக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒரு சில கடன்பட்டோர் மாத்திரம் மறுமொழி அழித்துள்ளதுடன் இந்த நிலைமையை எங்களுக்கு கட்டுப்படுத்த முடியாது. அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்திற்காக மறுமொழி அளிக்கப்படாத போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி நிலுவை மீதிகள் 2023.05.22 ஆம் திகதி ஆகும் போது தீர்வு செய்யப்பட்டிருந்தது. | நிலவுகின்ற கடன் பட்டோர் நிலுவை மீதிகளை அற விடுவதற்கு முறையான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் வருடத்திற்கு முன்னர் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆக்கப்பட்ட 503 பிரதிநிதிகளிடமிருந்து ரூபா 43,650,100 கடன் மீதி ஒன்று அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடன்பட்டோர் வயது பகுப்பாய்வின் பிரகாரம் 2 வருடங்களுக்கு அதிகமான கடன்பட்டோர் மீதிகள் ரூபா 28.5 மில்லியன் ஆகும். அந்த தொகையை அறவிடுவதற்காக எங்களது பிரதேச விற்பனை நிறைவேற்று அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். | கிடைக்கப் பெற வேண்டிய கடன் துரிதமாக அறவிடுவதற்கு உச்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சரியான அதிகாரத்துடனான தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கம்பனி, அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு கம்பனியின் வெளியீட்டிற்காக பங்களிப்பு செய்வதற்கு கம்பனி அனுமதி வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியில் பங்களிப்பு கணக்கின் உள்ள நிலுவை மீதி ரூபா 21,418,660 ஆக காணப்பட்டது. அவற்றில் ரூபா 13,683,486 ஆன மீதி 01 வருடத்தில் இருந்து 11 வருடங்களுக்கு அதிக காலபகுதிக்காக நிலுவையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடுவதற்கு போதிய நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. | பங்களிப்பு கணக்கில் காட்டப்பட்டுள்ள நிலுவை மீதிகள் 10 வருடங்களுக்கு அதிகமாக உள்ளதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கிடைக்கப் பெற வேண்டிய கடன் துரிதமாக அறவிடுவதற்கு உச்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சரியான அதிகாரத்துடனான தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | உரிய ஊழியர்கள் ஓய்வுபெறுதல், சேவையை நிறைவு செய்தல் அல்லது மரணம் காரணமாக கம்பனியை விட்டு நீங்கிய காரணத்தினால் 01 வருடத்திலிருந்து 22 வருடங்கள் வரையான அறவிடப்படாமல் உள்ள கூட்டு மொத்தம் ரூபா 7,357,501 ஆன மீதியும் ஊழியர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதியினுல் காணப்படுகின்றது. | தற்போது சேவையில் இருந்து விலகியுள்ள ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 5,458,049 ஆக காணப்படுவதுடன் அந்த பணத்தில் ரூபா 2,116,441 தொகையை ஊழியர்களின் சேமலாப நிதியில் இருந்து அறவிட்டுக் கொள்ள முடியும். எஞ்சிய தொகையான ரூபா 3,563,573 பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் வழங்கும் கால எல்லையின் போது கடனை மீளளிக்கும் இயலுமையுடன் அவர்களின் வயது, மேலும் செலுத்தும் வள்ளமை தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களுக்காக கடன் அடிப்படையில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும் போது குறிப்பிட்ட நிபந்தனை அல்லது உரிய காலப்பகுதியொன்று காணப்படாததால் 2 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்படாத 189 கடன் மீதிகள் ரூபா 19,537,397 ஆக இருந்தது. | செய்திப் பத்திரிகை தொழில் முயற்சியினுல் காணப்படுகின்ற அதீத போட்டித் தன்மையினுள் கடன் அடிப்படையிலான விளம்பரங்களை பிரசுரிப்பதில் கடினமான நிபந்தனைகளை அல்லது உரிய கடன்கால எல்லையை விதிப்பது சிரமமானதொன்றாகும். கடந்த 10 வருட காலத்தினுள் விளம்பர வருமானம் தீர்க்கப்படாத கடன் மீதி ரூபா 19.5 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் அதன் சதவீதமாக பார்க்கும் போது சிறிய தொகையாக இருந்த போதிலும் அந்த பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக உரிய நடவடிக்கைகளும் எங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. | கடன் அடிப்படையில் விளம்பரங்களை பிரசுரிக்கும் போது நிச்சயிக்கப்பட்ட நிபந்தனைகள் அல்லது உரிய கால எல்லையொன்று குறிப்பிடப்பட வேண்டும் |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின் 27(2)(ஓ) பிரிவு | 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களுக்கான கூட்டு மொத்தம் ரூபா 127,264,345 ஆன ஊழியர் சேமலாப நிதியத் தாமதக் கட்டணத்திற்கான மிகைக் கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது அனைத்து நிலுவைத் தொகைகளும் செலுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது தாமதமின்றி உரிய திகதியில் நிதியத்திற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் வரையறுக்கப்பட்ட அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் சேமலாப நிதியம் 2(vi) பந்தி 44 ஆம் இலக்கப் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கள் கணக்கிடப்படுவதற்கு உரிய கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகள் கருத்திற்கொள்ளப்படாமையால் கம்பனியின் பங்களிப்பு ரூபா 40,053,954 மற்றும் ஊழியர் பங்களிப்பு ரூபா 42,532,794 குறைவாகவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ரூபா 8,010,790 குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தன | 1959 ஆம் வருடத்தில் இருந்து அசோசியட்டெட் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட் கம்பனியின் ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு கணக்கிடப்பட்டிருப்பது ஆரம்ப சம்பளம், உணவு கொடுப்பனவு என்பவற்றை கூட்டி பெறப்பட்ட தொகையில் ஆகும். தற்போது கூடுதலாக நிறுவனங்களில் ஊழியர் சேமலாப நிதி கணக்கிடப்படுவது ஊழியர்களின் ஆரம்ப சம்பளங்களின் அடிப்படையில் ஆகும். | ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2006 அரச பெறுகை வழிகாட்டிக் கோவை | அரச பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாததுடன் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முறையான பெறுகை நடைமுறையொன்றும் இல்லாமையால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,195,572 ஆன பெறுகைகள் | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பெறுகை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதுடன் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் | புதிய பெறுகை வழிகாட்டல் கோவை துரிதமாக அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வருடத்தில் புதிய பெறுகை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானம் இலக்கம் 35/11/20 | பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு முரணாக சம்பளம் மற்றும் வேதனம் கம்பனியால் செலுத்தப்படுகின்ற அடிப்படையில் பொதுசன ஊடக அமைச்சு அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த ஆலோசகர் ஒருவருக்காக ஆலோசனைக் கட்டணமாக ரூபா 900,000 செலுத்தப்பட்டிருந்தது. | கடந்த நிறுவாக அதிகாரிகளினால் அப்போது இருந்த ஊடாக அமைச்சரின் வேண்டுகோளிற்கு இணங்க சுயாதீன ஆலோசகர் ஒருவர் கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்டது. அந்த நபரின் சேவை 2022.12.06 ஆம் திகதியில் இருந்து இடைந்நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், தற்போது எவ்வித சுயாதீன ஆலோசகரும் ஆட் சேர்க்கப்பட்டு அமைச்சின் பதவியணியினருக்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு பாதகமாகும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட கூடாது. |
| (உ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (உ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் வகையில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதற்கு நிறுவனத்தின் கணக்கீட்டு அலுவலர் பொறுப்பு என்ற போதிலும், 2022 நவம்பர் 03 முதல் 2023 யூன் 30 வரையில் வெளியிடப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2023 யூன் 30 வரையில் பதில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த கால எல்லைக்குள் அரச கணக்காய்வு ஐய வினாக்களுக்கு கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டும் என பிரதான கணக்காய்வு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக குறித்த கால எல்லைக்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(8) | சட்டத்தின் 7ஆவது உப பிரிவின் (ஏ) மற்றும் (பி) பந்திகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை குறித்த அரச கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையினால் பரிசீலிக்கப்பட வேண்டும். அவ்வாறு, பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் அந்த நிர்வாக சபையினால் கணக்காய்வு அறிக்கையில் சுட்டி காட்டப்பட்டுள்ள விடையங்கள் தொடர்பாக எடுப்பதற்கு முன்மொழியப்பட்ட படிமுறைகள் கணக்காய்வு அறிக்கை கம்பெனிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற தினத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 வருடங்களில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. 2022 ஆம் வருடத்திற்கான முகாமைத்துவ அறிக்கை கிடைக்கப்ப பெற்றதன் பின்னர் நிதிச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றேன். | சட்டத்தின் முறைமைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் பிரதான நடைமுறைக் கணக்கு உட்பட 10 கணக்குகளுக்கான வங்கி இணக்க கூற்று குறிப்பிட்ட திகதியில் தயாரிக்கப்படாது கனிசமானளவு கால தாமத்தின் பின்னர் தயாரிக்கப்பட்டமையால் வங்கி இணக்க கூற்று தயாரிப்பதற்கான நோக்கம் நிறைவேற்றப்படாததுடன் இலங்கை வங்கியின் 377 ஆம் இலக்க கணக்கில் இனங்காணப்படாத நேரடி அனுப்பல்கள் 511 இற்கான ரூபா 20,684,387 மற்றும் காசேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 25 சந்தர்ப்பங்களிலான கொடுப்பனவுகள் ரூபா 20,220,216 ஆக இருந்ததுடன் விநியோகிக்கப்பட்டும் மாற்றப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,271,916 | கொவிட் தொற்று மற்றும் ஸ்திர தன்மையற்ற அரசியல் நிலவரங்களினால் ஊழியர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டது. வாரத்திற்கு 3 நாட்கள் மாத்திரமே ஆகும் அந்த நிலையில் வங்கி கணக்கு இணக்குகள் தயாரிப்பது தாமதம் அடைந்து இருந்ததுடன் தற்போது அந்த தாமதத்தை நீக்கி கொள்வதற்கு முடியுமாக இருந்தது. மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு சட்ட | அந்தந்த மாதத்திற்குரிய வங்கிக்கணக்கிணக்கங்களை தாமதம் இன்றி சரியாக தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அடையாளங் காணப்படாத நேரடி கிடைக்கப் பெற்ற பெறுவனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கும் மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றை பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இற்கான 121 காசோலைகள் அவதானிக்கப்பட்டதுடன் ஏனைய வங்கிக் கணக்குகள் பரிசோதனை செய்யப்பட்ட போது மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்தம் ரூபா 27,442,442 பெறுமதியான மதிப்பிழந்த 277 காசோலைகள் காணப்பட்டன. அவற்றில் ரூபா 2,483,943 பெறுமதியான 76 காசோலைகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது முறையே 5 வருடத்திற்கும் மேற்பட்ட காலமொன்றாக தீர்க்கப்படாமல் காணப்பட்டன. | நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் விளைவு ரூபா 191,937,000 நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 332,012,000 ஆகும். அதன்படி நிதி விளைவில் ரூபா 523,949,000 விருத்தியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக செய்திப் பத்திரிகை வருமானம் முன்னைய வருடத்திற்கு இணையான 16 %; குறைவாகவும் ஏனைய வருமானங்கள் 44 % தால் குறைவாகவும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவுகள் 21% லும் நிதிச் செலவுகள் 41 % னால் கூடுதலானதும் காரணமாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் கம்பனியின் மொத்த இலாப விகிதம் மற்றும் புள்ளியிடப்பட்ட இலாபம் கம்பனியின் முன்னைய வருடத்திற்கு இணையான சதவீதம் முறையே 4% இனால் மற்றும் 37% வினால் குறைந்திருந்தடன் மீளாய்வாண்டின் நடைமுறை சொத்துக்களின் விகிதம் 3.4 வும் துரித சொத்துக்களின் விகிதம் 2.5 ஆகவும் கடன் மூலதன விகிதம் 0.89 வும் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகத்தில் முன் சுவரில் ஓவியம் வரைவதற்கான ஒப்பந்தத்தில் கம்பனியால் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போது 10,650 சதுர அடி கருத்திற் கொள்ளப்படாதமையால் அந்த அளவிற்காக ரூபா 522,100 தொகையொன்று பழைய ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுவதடுற்கு முடியாதிருந்ததுடன் அந்த அதிகாரிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். | நட்டத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் தவறான விளம்பரங்கள் வெளியிடப்பட்டதால் அத்தவறுகளைத் திருத்துவதற்கான அறிவித்தல்களை வெளியிடுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த விற்பனை | விடையளிக்கப்படவில்லை. | விளம்பரங்களை பிரசுரிக்கும் போது பிழையான விளம்பரங்கள் பிரசுரிப்பதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| செய்யக்கூடியதாக இருந்த விளம்பர காலத்தின் பெறுமதி ரூபா 2,480,117 ஆகும். | | எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 திசெம்பர் மாதத்தில் கம்பனியால் லங்கா புவத் லிமிட்டட்டில் 1200 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக கம்பனியினால் ரூபா 1,200,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதும், 2022 திசெம்பர் 31 வரை எவ்வித பிரதிபலனொன்றும் கிடைத்திருக்கவில்லை. | ஊடக அமைச்சின் கீழ் காணப்படுகின்ற லங்கா புவத் கம்பனி 2014 ஆம் வருடத்தில் இருந்து இயங்காத கம்பனி ஆகும். | முதலீடொன்றை மேற்கொள்ளும் போது அது தொடர்பாக மதிபீடொன்று செய்யப்பட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் வருடத்தில் லங்கா புவத் லிமிட்டட்டில் மூன்று ஊழியர்களின் சம்பளம் மற்றும் வேதனமாகச் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 2,194,637 ஆனது 2022 திசெம்பர் 31 வரையில் பெற வேண்டிய மீதியொன்றாக காட்டப்பட்டிருந்தது. | அந்த கம்பனியின் கிடைக்கப் பெற வேண்டிய தொகை அறவிட முடியாததன் காரணமாக அதை அறவிட முடியாக் கடனாக கருதி பதிவளிப்பதற்கு இந்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு உச்ச முயற்சிகளை மேற்கொண்டு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் முன்னாள் விற்பனைத் தலைவரின் பொறுப்பின்மை காரணமாக ஏற்பட்ட நிதி மோசடி தொடர்பாக சாதாரண ஒழுக்காற்று நடைமுறைக்கு மாறாக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் ரூபா 22,481,380 ஆன நிதி நட்டமொன்று தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். எங்களுடைய நிதிக்கூற்றின் பிரகாரம் அவ்வாறு நிகழ்ந்துள்ள நட்டம் ரூபா 14,103,153 ஆகும். இந்த தொகையை அறவிட்டுக் கொள்ள முடியாததன் காரணமாக 2023 ஆம் வருடத்தில் அதை அறவிட முடியாக் கடனாக கருதி பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டங்களை சரியாக அடையாளங்கண்டு உரிய தரப்பினரிடமிருந்து அதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1985 ஆம் ஆண்டில் ஆதன அபிவிருத்தி வியாபாரத்தில் ஈடுபடுத்துவதற்காக லேக்ஹவுஸ் புறொப்பட்டி டிவலெப்மென்ட் (தனியார்) கம்பனி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2023 மே வரையில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் காசுப்பாய்ச்சலொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | லேக்ஹவுஸ் புறொப்பட்டி டிவலெப்மென்ட் நிறுவனம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாத ஒரு விளைவற்ற கம்பனி ஆகும். எதிர்காலத்தில் அதை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொருத்தமான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | வார இறுதி செய்திப்பத்திரிகையான ‘‘சிலுமின’’ செய்திப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை சம்பந்தமாக வாதியினால் கம்பனியிடமிருந்து ரூபா | இந்த வழக்கு முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை என்பதுடன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை மாவட்ட | வழக்கறிஞரின் ஏதாவது செயற்திறன் இன்மையினால் கம்பனிக்கு கெடுதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | 500 மில்லியன் கோரி தாக்கல் செய்திருந்த வழக்கு 2010 ஆம் ஆண்டிலே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கூட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் கம்பனியின் சார்பில் தோற்றிய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தவறான அறையில் சமூகமளித்திருந்தமையால் வாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு ரூபா 500 மில்லியன் நட்டஈடொன்றை செலுத்துமாறு நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. பின்னர், இத்தீர்ப்பு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்றை தொடுப்பதற்காக ரூபா 18,230,000 சட்டக்கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த வழக்கிற்காக தவறான நீதிமன்ற அறையில் சமூகமளித்திருந்த வழக்கறிஞராலேயே வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை அந்த அதிகாரிக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. | நீதிமன்றம் பெற்றுத்தந்த ஒரு தரப்பிலான தீர்ப்பை நடைமுறைப்படுத்த முடியாது அத்தோடு நிறுவனத்தினால் கம்பெனியின் வழக்கறிஞருக்கு தொழில் ரீதியான கவனமின்மையை கருதி ஒழுங்காற்றுப் பரிசீலனை ஒன்றை நடத்துதல் தொடர்பாக தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு நான் தவறியிருந்தேன். 2020 மே 15 இல் இருந்து 2020 நவம்பர் 14 வரை ஒப்பந்த அடிப்படையில் அவரின் சேவையை மேலும் 6 மாதங்களுக்கு நீடித்து சேவை நீடிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு நேர்ந்ததற்கு காரணம் 2020 மார்ச் 11ஆம் திகதியில் இருந்து covid 19 பரவிய பின்னர் காணப்பட்ட நிலைமையின் கீழ் உரிய அனைத்து ஆவணங்கள் தொடர்பாக மிக நெருங்கிய ஒரே ஒரு உத்தியோகத்தர் அவர் என்பதனால் ஆகும். அந்த நீடிப்பு காலம் நிறைவடைந்த பின்னர் அவருக்கு மேலும் சேவை நீடிப்பொன்று வழங்கப்படவில்லை. | இடம்பெற்றுள்ளதா என்பதை மேலும் பரீசீலனை செய்து அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது கம்பனியின் ஏனைய வருமானம் 44.7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் மாற்று வருமான மூலமொன்றை மேம்படுத்துவதில்- அதிக கவனம் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிக்கடி நட்டம் அடைதலை காரணப்படுத்தி பேருந்து தொழில் முயற்சி நிறுத்தப்பட்டது. 2022 க்கு ஒப்பாக 2023 முதல் 04 மாதத்திற்குள் வியாபார அச்சுப் பிரிவின் பிரகாரம் 121% னால் அதிகரித்துள்ளது. 2023 மாற்று வருமானங்கள் மார்க்கம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் 2023 மார்ச் மாதத்தில் இருந்து e- paper க்கான பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டறிக்கைகள் தயாரித்தல், பரிசோதித்தல் மற்றும் அங்கீகரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பொதுவான வேலை பகிர்ந்தளிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வர்த்தக அச்சீட்டுத் திணைக்களத்தில் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. கிரய மதிப்பீடு தயாரித்தலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வெளிப்படையான முறைமையொன்று பின்பற்றப்படாததுடன் மதிப்பீடு தயாரித்தல் தனிப்பட்ட நபரின் அனுபவத்தின் அடிப்படையில் பெறப்பட்ட தனிப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஆம் வருடத்துடன் ஒப்பிடும்போது 2022 ஆம் வருடத்தில் வர்த்தக அச்சீட்டுத் திணைக்களத்தின் வருமானம் ரூபா 8,451,347 குறைவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டறிக்கை தயாரித்தல், பரிசோதித்தல், அங்கீகரித்தல் ஆகிய பொதுவான வேலை பகிர்ந்தளிப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. 2022 வருடத்திலேயே வர்த்தக அச்சக திணைக்களத்தின் வருமானம் குறைவதற்கு தாக்கம் செலுத்தியுள்ள பிரதான சாதனமாவது ஏப்ரல் மாதத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரை நிலவிய அரசியல் ஸ்திரதன்மை இல்லாதிருந்தமையே ஆகும். | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிக்க பொருத்தமான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த 05 வருட காலத்திற்கு முந்திய வருடங்களை ஒப்பிடும் போது விற்பனை செய்யப்படுகின்ற பத்திரிகைகளின் எண்ணிக்கை தொடர்ந்து படிப்படியாக குறைவடைந்துள்ளது. பத்திரிகை விற்பனை வருமானம் 2017 ஆம் வருடத்தில் ரூபா 525 மில்லியன் ஆக இருந்ததுடன் அது 2022 ஆம் வருடத்தில் ரூபா 331 மில்லியன் வரை குறைந்திருந்தது. பத்திரிகை விற்பனையை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய மூலோபாய நடவடிக்கை மற்றும் செயற்பாடு தொடர்பாக முகாமைத்துவம் போதியளவு நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறியிருந்தமையால் பத்திரிகை விற்பனை எண்ணிக்கை 2017 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் வருடத்தில் 61 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | 2021 ஆம் வருடத்திலும் கொவிட் தொற்றை காரணப்படுத்தி ஒட்டுமொத்த செய்திப் பத்திரிகையின் தொழில் முயற்சியும் விற்பனையாகும் செய்திப் பத்திரிகையின் எண்ணிக்கையும் வீழ்ச்சியொன்றில் காணக்கூடியதாக இருந்ததுடன் விற்பனை வருமானம் குறையும் நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிக்க பொருத்தமான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறை உபயோகமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14,700,000 பெறுமதியான இரண்டு பேருந்துகள் 2022 மே மாதம் முதல் இற்றை வரை ஓட்டத்திற்குப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன | இரண்டு பேருந்துகளும் அடிக்கடி நட்டம் அடைதலை காரணப்படுத்தி கதிர்காமம் போக்குவரத்துச் சேவை இடை நிறுத்தப்பட்டது. அந்த இரண்டு பேருந்துகளில் ஒரு பேரூந்தை விற்பனை செய்வதற்கும் அடுத்த பேரூந்தை ஊழியப் போக்குவரத்துக்கும் உபயோகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. | முதலில் ஒன்றை மேற்கொள்ளும் போதும் மற்றும் தீர்மானத்தை மேற்கொள்ளும் போதும் சாத்திய வள ஆய்வொன்றின் பின்னர் நிறுவனத்திற்கு நன்மை பயிர்க்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக 1985 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படடு 2021 ஆம் ஆண்டில் மீண்டும் மதிப்பிடப்பட்ட ரூபா 733,000,000 பெறுமதியான ஹோகந்தர பிரதேசத்தின் 8 ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்ட காணியொன்று கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலை சுமூக நிலைக்கு மாறிய பின்னர் ஹோகந்தர காணியை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆக்கபூர்வமான முறையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 வேறு அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நவம்பர் 26 ஆந் திகதி ஊடக அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி 2020 திசெம்பர் 07 ஆம் திகதி சுயாதீன ஆலோசகரொருவர் கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஆலோசகர் 2020 திசெம்பர் 08 ஆம் திகதி ஊடக அமைச்சரின் பதவியணியிலும் 2021 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சுகாதார அமைச்சரின் பதவியணியிலும் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனிக்கு எவ்வித சேவையினையும் பெற்றுக் கொள்ளாமல் ஆலோசனைக் கட்டணமாக ரூபா 1,800,000 தொகையொன்று கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது. | கடந்த கால நிருவாக அதிகாரிகளினால் அப்போது இருந்த ஊடக அமைச்சரின் வேண்டுகோளிற்கு இணங்க சுயாதீன ஆலோசகர் ஒருவர் கம்பனிக்கு ஆட் சேர்க்கப்பட்டிருந்தது. அந்த நபரின் சேவை 2022.12.06 ஆம் திகதியில் இருந்து இடை நிறுத்தப்பட்டது. இருப்பினும் தற்போது எவ்வித சுயாதீன ஆலோசகரும் ஆட்சேர்க்கப்பட்டு அமைச்சரவை பதவியணியினருக்கு விடுவிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அவ்வாறு இடம் பெறாமல் இருப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் வருடத்தில் ஆலோசகருக்கு ரூபா 3,150,000 செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டு பெறப்பட்ட மனிதவள முகாமைத்துவ கொள்கைக்காக 2022 திசெம்பர் 31 வரை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் மீண்டுமொருமுறை அந்த ஆலோசகர் 2022 நவம்பர் மாதத்தில் அப் பணிக்காக 06 மாத ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு மாதாந்தம் ரூபா 150,000 வீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 மே 01 முதல் மேலும் 06 மாத காலத்திற்கு ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | கம்பெனியினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கான கடமை பட்டியல் மற்றும் பகைமைகள் வினைத்திறனான முகாமைத்துவத்திற்காக கொள்கைகள் தயாரிக்கப்படுவதுடன் அவை இவ்வருடத்திற்குள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக இப்போதும் மனிதவள ஆலோசகர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்டுள்ளார். | ஆட்சேர்ப்பு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், அச்சீட்டுப்பிரிவு அபிவிருத்தி செய்வதற்காகக பெறுகைகள் மற்றும் மேம்படுத்தலுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்படுத்தப்படாததுடன் விளம்பரப்பிரிவு, டிஜிட்டல் மீடியாப் பிரிவு மற்றும் விற்பனைப் பிரிவிற்கான திட்டம் குறைந்த அளவு மட்டத்தில் செயற்படுத்தப்படாமையால் நிறுவனத்தின் வருமானத்தை மேம்படுத்துவதற்கு அல்லது நட்டத்தை குறைப்பதற்காக காணப்பட்ட சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. | digetal media பிரிவை வழுப்படுத்தும் முகமாக தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் படிப்படியாக இதன் மூலம் பெறப்படும் வருமானத்தின் விருத்தி ஒன்று காணக் கூடியதாக உள்ளது. | நிறுவனத்தின் வருமான விருத்திற்கு நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். |